©
தமிழ்நாடு அரசு
2018

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 5.60 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 32]

சென்னை, புதன்கிழமை, ஆகஸ்ட் 8, 2018
ஆடி 23, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (2D) எண் 49, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 15 மே 2018.]*

1948–ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, மேற்சொன்ன சட்டத்தின் 5–ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 31.10.2012 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2 இல், 575–576 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/725/2012 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், கீழேயுள்ள விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு மாநிலத்தில் ஊதுவத்தி தயாரிக்கும் தொழிலில் உள்ள பணியாளர்களின் வகையினருக்கு வழங்க வேண்டிய குறைந்த அளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

(2) இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

## விவர அட்டவணை

## ஊதுவத்தி தயாரிப்புத் தொழிலில் வேலைவாய்ப்பு

| தொடர் எண் (1) | பணி/பணியாளர்களின் வகைகள் (2) | குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (மாதமொன்றுக்கு) (3) மண்டலம் A (i) ரூ. காசு | மண்டலம் B (ii) ரூ. காசு | மண்டலம் C (iii) ரூ. காசு | மண்டலம் D (iv) ரூ. காசு |
|---|---|---|---|---|---|
| I. | **தயாரிப்புப்பிரிவு:**<br>(1) செப்பமுறா வத்திகளைச்சுற்றுதல் (தொழிற்சாலைகளில்) | 5211.00 | 5125.00 | 5037.00 | 4950.00 |
| | (2) (a) சிப்பம் செய்தல் | 5229.00 | 5211.00 | 5125.00 | 5037.00 |
| | (b) சிப்பம் செய்தல் (வாசனை திரவத்தைத் தெளித்தல் அல்லது வாசனை திரவத்தில் முக்குதல் உட்பட) | 5631.00 | 5525.00 | 5430.00 | 5334.00 |
| II. | **நிருவாகப்பிரிவு** | | | | |
| | (1) தட்டச்சர் | 5256.00 | 5169.00 | 5080.00 | 4994.00 |
| | (2) எழுத்தர் | 5229.00 | 5141.00 | 5055.00 | 4967.00 |
| | (3) மேற்பார்வையாளர் | 5229.00 | 5211.00 | 5125.00 | 5037.00 |
| | (4) மேலாளர் | 5648.00 | 5474.00 | 5235.00 | 5299.00 |
| | (5) ஓட்டுநர் (மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டத்தில் தொழிலாளர் என்ற பொருள் விளக்கத்தின் கீழ் வருகிற ஓட்டுநர்கள் தவிர) | 5474.00 | 5387.00 | 5299.00 | 5211.00 |
| | (6) காவலாள் அல்லது அலுவலக உதவியாளர் அல்லது சிற்றேவலர் அல்லது ஏவலாள் | 4950.00 | 4862.00 | 4820.00 | 4767.00 |
| III. | **விற்பனைப்பிரிவு**<br>(a) விற்பனைப் பணியாளர் | 5299.00 | 4950.00 | 4775.00 | 4601.00 |
| | (b) உதவி விற்பனைப் பணியாளர் | 4950.00 | 4862.00 | 4820.00 | 4775.00 |
| IV. | **ஏனைய வகையினர்:**<br>மேற்சொன்னவற்றின் கீழ் வராத ஏனைய பணியாளர் வகையினர் | 4950.00 | 4862.00 | 4820.00 | 4775.00 |
| V. | **செப்பமுறா வத்திகளைச்சுற்றுதல் (வீட்டுவேலை செய்பவர்களுக்கு):**<br>(a) 6" வரை செப்பமுறா 1000 வத்திகளைச் சுற்றுவதற்கு | 37.67 | 36.61 | 35.53 | 34.44 |
| | (b) 6" மேற்பட்ட செப்பமுறா 1000 வத்திகளைச்சுற்றுவதற்கு | 46.28 | 45.22 | 44.14 | 43.06 |

**குறிப்பு: மண்டலங்களின் வகைப்பாடு வருமாறு:—**

**மண்டலம் —A :** அனைத்து மாநகராட்சிகள்

**மண்டலம் —B :** அனைத்து நகராட்சிகள்

**மண்டலம் —C :** அனைத்து நகரியங்கள், பேரூராட்சிகள் மற்றும் பாளையங்கள்

**மண்டலம் —D :** மண்டலம் A,B மற்றும் C—யில் வராத எனைய பகுதிகள்.

விளக்கங்கள்:—

**(1) அகவிலைப்படி:** (தொழிலகப் பணியாளர்களுக்கு இணையாக வீட்டில் வத்தி சுற்றுகிற பணியாளர்களுக்கு) 1000 வத்திகளை சுற்றுவதற்கு ரூபாய் 34.55 என்ற வீதத்தில் அகவிலைப்படி கணக்கீடு செய்யப்படும். இருப்பினும் நாளொன்றில் சுற்றப்படுகிற வத்திகளின் எண்ணிக்கை 3000—க்கு மேற்பட்டாலும் கூட அதிகளவு அகவிலைப்படி, ரூபாய் 103.65 க்கு மேற்படக்கூடாது.

**(2) அகவிலைப்படி:** (தொழிலகப் பணியாளர்களுக்கு):—

(i) அகவிலைப்படி, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள் ஆகும்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி மாதமொன்றுக்கு ரூ. 28.55 (இருபத்து எட்டு ரூபாய் ஐம்பத்து ஐந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) நுகர்வோர் விலைப்புள்ளிகளின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்படவேண்டும்.

(iii) முதல் கணக்கீடு, முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் விலைப்புள்ளிக் குறியீட்டு எண்ணின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(iv) நாள் ஊதியத்தை கணக்கிடுவதற்கு, மாத ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(v) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(vi) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மங்கத் ராம் சர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 61, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 26 ஜூன் 2018.]*

1948—ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3—ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5—ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 5—3—2014 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2 இல், 323 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/LE/242/2014 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் நேர்விற்கேற்ப அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் நீங்கலாக, அரசு மானியமின்றி வர்த்தக ரீதியாக நடத்தப்படும் கல்வி பயிற்சி நிறுவனங்களில், அதாவது தனியார் பயிற்றுவிப்புக் கல்லூரிகள் (Tutorial Colleges) தொழில்நுட்ப நிறுவனங்கள், தொடக்க மற்றும் மழலையர் பள்ளிகள், ஆங்கிலவழிப்பள்ளிகள் ஆகியவற்றில் பணியமர்த்தப்பட்டுள்ள, கீழேயுள்ள விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள, பணியாளர் வகையினருக்கு, அந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை இதனால் திருத்தியமைக்கிறார். இந்த அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

(2) இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**நேர்விற்கேற்ப அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் நீங்கலாக, அரசு மானியமின்றி வர்த்தக ரீதியாக நடத்தப்படும் கல்வி பயிற்சி நிறுவனங்களில், அதாவது தனியார் பயிற்றுவிப்புக் கல்லூரிகள் (Tutorial Colleges), தொழில்நுட்ப நிறுவனங்கள், தொடக்க மற்றும் மழலையர் பள்ளிகள், ஆங்கிலவழிப்பள்ளிகள் ஆகியவற்றில் வேலைவாய்ப்பு**

| *பணியாளர்களின் வகைகள்* (1) | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (மாதமொன்றுக்கு) (ரூ. காசு.)* (2) | | |
|---|---|---|---|
| | *மண்டலம்* A | *மண்டலம்* B | *மண்டலம்* C |
| ஆசிரியர் அல்லாத பிற பணியாளர்கள் | | | |
| | *ரூ. காசு* | *ரூ. காசு* | *ரூ. காசு* |
| (அ) எழுத்தர் / தட்டச்சர் / காசாளர் / நூலகர் | 6860.00 | 6646.00 | 6433.00 |
| (ஆ) ஓட்டுநர் | 6646.00 | 6433.00 | 6220.00 |
| (இ) அலுவலக உதவியாள் / தோட்டப்பணியாளர் / ஆயா / காவலாள் | 5580.00 | 5473.00 | 5367.00 |
| (ஈ) துப்புரவுப் பணியாளர் | 5473.00 | 5367.00 | 5260.00 |

**விளக்கங்கள்:—** (1) மண்டலங்களின் வகைப்பாடு :— மண்டலங்களின் வகைப்பாடு பின்வருமாறு இருக்கப்படவேண்டும் A, B மற்றும் C மண்டலங்களில் கீழ்க்காணும் பகுதிகள் அடங்கியிருக்கும்.

**மண்டலம் —A** : அனைத்து மாநகராட்சிகள்

**மண்டலம் —B** : நகராட்சிகளின் அனைத்து நிலைகள்

**மண்டலம் —C** : பேரூராட்சிகள், ஊராட்சிகள் மற்றும் ஏனைய பகுதிகள்.

**(2) அகவிலைப்படி:** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்படவேண்டும்.

(i) அகவிலைப்படி, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது. அதாவது 2001=100 என்பதன் அடிப்படையில் 161 புள்ளிகள் ஆகும். 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் மாதமொன்றுக்கு ரூ. 32.65 (முப்பத்திரண்டு ரூபாய் அறுபத்தைந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை நுகர்வோர் விலைப்புள்ளிகளின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்படவேண்டும்.

(iii) முதல் கணக்கீடு, முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர் நுகர்வோர் விலைப்புள்ளிக் குறியீட்டு எண்ணின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(3) ஒரே தன்மையுடைய பணியைச் செய்யும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(4) நாள் ஊதியவீதங்களைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(5) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மங்கத் ராம் சர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 62, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 27 ஜூன் 2018.]*

**1948–ஆம்** ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **11/1948**) **3–ஆம்** பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதி **5–ஆம்** பிரிவைச் சேர்ந்த **(2)** உட்பிரிவு ஆகியற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், வெளியிடக்கருதியுள்ள அறிவிக்கையின் கீழ்காணும் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் **5** ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) - பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

**(2)** இது தொடர்பாக **27–09–2018** ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாக வரப்பெறுகிற யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரை தமிழ்நாடு அரசால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவற்றை, சென்னை–**600 006** இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–**600 009** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## வரைவு அறிவிக்கை

**1948–ஆம்** ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **11/1948**) **3–ஆம்** பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதி, **5–ஆம்** பிரிவைச் சேர்ந்த **(2)** உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், **30–10–2013** ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் **II** பிரிவு **2** இல், **724–725** ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/818/2013 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையினை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் திரைப்படத் தொழிலில் (தயாரிப்பு, விநியோகம், விளம்பரம் ஆகியவை உட்பட) பணியமர்த்தப்பட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவணையின் **(1)** ஆம் நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளைச் செய்கிற தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை அந்த விவர அட்டவணையின் **(2)** நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

## விவர அட்டவணை

### திரைப்படத் தொழிலில் (தயாரிப்பு, விநியோகம், விளம்பரம் ஆகியவை உட்பட) வேலைவாய்ப்பு

| | *பணியாளர்களின் வகைகள்* | *திங்களொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (ரூ. காசு.)* |
|---|---|---|
| | *(1)* | *(2)* |
| **I.** | **திரைப்படப் பிடிப்பு நிலையம்:** | |
| **1.** | **தயாரிப்பு** | |
| (1) | துப்புரவுப் பணியாளர் / பெருக்குபவர் | **6810.00** |
| (2) | பணிப்பெண் / அலுவலக உதவியாள் / ஏவலாள் | **6880.00** |
| (3) | காவலாள் | **6880.00** |
| (4) | ஓட்டுநர் (கனரக வாகனம் மற்றும் வேன்) | **7744.00** |
| (5) | ஓட்டுநர் (இலகு ரக வாகனங்கள்) | **7409.00** |
| (6) | உதவியாள் (Attender) | **6950.00** |
| (7) | உதவிக் கணக்காளர் | **8208.00** |
| (8) | கணக்காளர் | **9072.00** |
| (9) | எழுத்தர் | **7802.00** |
| (10) | தட்டச்சர் | **8011.00** |
| (11) | சுருக்கெழுத்துத் தட்டச்சர் | **8402.00** |
| (12) | உதவி மேலாளர் | **10192.00** |
| (13) | மேலாளர் | **11785.00** |
| **2.** | **மின் பிரிவு** | |
| (1) | மின்விளக்கு தூக்குபவர் | **7409.00** |
| (2) | மின் பணியாளர் நிலை - II | **7919.00** |

| *பணியாளர்களின் வகைகள்* <br> *(1)* | *திங்களொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (ரூ. காசு.)* <br> *(2)* |
|---|---|
| (3) மின் பணியாளர் நிலை - I | 8402.00 |
| **3. வார்ப்படப் பிரிவு** | |
| (1) உதவியாள் | 6880.00 |
| (2) வார்ப்பட மேஸ்திரி | 8736.00 |
| **4. ஓவியப் பிரிவு** | |
| (1) உதவியாள் | 6880.00 |
| (2) உதவி ஓவியர் | 8208.00 |
| (3) தலைமை ஓவியர் | 8736.00 |
| **5. கலைப் பிரிவு** | |
| (1) உதவியாள் | 6880.00 |
| (2) தச்சர் (நிலை - II) | 8208.00 |
| (3) தச்சர் (நிலை - I) | 8736.00 |
| (4) மேஸ்திரி | 8934.00 |
| **6. ஒப்பனைப் பிரிவு** | |
| (1) ஒப்பனை உதவியாளர் | 7409.00 |
| **7. புகைப்படக் கருவிப் பிரிவு** | |
| (1) புகைப்படக் கருவி உதவியாளர் நிலை - II | 7744.00 |
| (2) புகைப்படக் கருவி உதவியாளர் நிலை - I | 8402.00 |
| (3) புகைப்படப் பிரிவுக்குப் பொறுப்பு வகிப்பவர் | 10724.00 |
| **8. திரைப்படச் சுருளைக் கழுவும் பிரிவு (Laboratory Department)** | |
| (1) திரைப்படச் சுருளை வேதியியல் முறையில் மேம்படுத்தும் உதவியாளர் நிலை - I | 8241.00 |
| (2) திரைப்படச் சுருளை வேதியியல் முறையில் மேம்படுத்தும் உதவியாளர் நிலை - II | 7582.00 |
| (3) திரைப்படச் சுருளை வேதியியல் முறையில் மேம்படுத்தும் உதவியாளர் நிலை - III | 7074.00 |
| (4) பிரிவுப் பொறுப்பாளர் | 9408.00 |
| (5) திரைப்படச் சுருள் நெகட்டிவ் பரிசோதிப்பவர் | 7582.00 |
| (6) திரைப்படச் சுருள் பாசிட்டிவ் பரிசோதனை உதவியாளர் | 7074.00 |
| **9. வேதியியல் பிரிவு** | |
| (1) வேதியியல் பொருட்களைக் கலப்பவர் | 8068.00 |
| (2) வேதியியல் பொருட்களைக் கலக்கும் உதவியாளர் | 7409.00 |
| (3) வேதியியலர் | 9408.00 |

| | *பணியாளர்களின் வகைகள்* <br> *(1)* | *திங்களொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (ரூ. காசு.)* <br> *(2)* |
|---|---|---|
| **10.** | **அச்சகப் பிரிவு** | |
| (1) | அச்சக உதவியாளர் நிலை-I | 8736.00 |
| (2) | அச்சக உதவியாளர் நிலை-II | 8068.00 |
| (3) | அச்சக உதவியாளர் நிலை-III | 7409.00 |
| **11.** | **திரைப்படச் சுருளை மேம்படுத்தும் பிரிவு** | |
| (1) | திரைப்படச் சுருள் நெகட்டிவ் பரிசோதிப்பவர் | 7582.00 |
| **12.** | **திரைப்படம் காட்டும் இயந்திரப் பிரிவு** | |
| (1) | திரைப்படம் காட்டும் இயந்திரத்தை இயக்குபவர் நிலை-I | 8068.00 |
| (2) | திரைப்படம் காட்டும் இயந்திரத்தை இயக்குபவர் நிலை-II | 7409.00 |
| (3) | திரைப்படம் காட்டும் இயந்திரத் தலைமை இயக்குபவர் | 9408.00 |
| **13.** | **ஒலிப்பதிவுப் பிரிவு** | |
| (1) | உதவியாள் | 7074.00 |
| (2) | ஒலிப்பதிவு செய்யும் உதவியாள்/ஒலிப்பதிவு அறை உதவியாள் | 7409.00 |
| (3) | ஒலிப்பதிவாளர் | 9408.00 |
| **14.** | **படத்தொகுப்புப் பிரிவு** | |
| (1) | படத்தொகுப்புப் பிரிவுப் பையன் | 7409.00 |
| **II.** | **வெளிப்புறப் படப்பிடிப்புப் பிரிவு** | |
| (1) | வேன் ஓட்டுநர் (கனரக வாகனம்) | 7802.00 |
| (2) | மின் பணியாளர் நிலை-I | 8402.00 |
| (3) | மின் பணியாளர் நிலை-II | 7919.00 |
| (4) | மின்விளக்கு பொறுப்பாளர் (Lightman) | 7409.00 |
| (5) | புகைப்படக் கருவி உதவியாளர்-I | 9072.00 |
| (6) | புகைப்படக் கருவி உதவியாளர்-II | 8208.00 |
| (7) | ஒலிப்பதிவாளர் | 8402.00 |
| (8) | ஏவலாள் அல்லது காவலாள் | 6880.00 |
| (9) | ஒலிப்பதிவு உதவியாளர் | 7005.00 |
| **III.** | **விநியோகம்** | |
| (1) | துப்புரவுப் பணியாளர் | 6810.00 |
| (2) | அலுவலகப் பையன்/சிப்பம் செய்பவர் (ஏவலாள் எனப்படுபவர்) | 6880.00 |
| (3) | காவலாள் | 6880.00 |
| (4) | ஓட்டுநர் (கனரக வாகனம் மற்றும் வேன்) | 7744.00 |
| (5) | ஓட்டுநர் (இலகு ரக வாகனங்கள்) | 7409.00 |
| (6) | லைன் ஆப்பரேட்டர் | 7144.00 |

| பணியாளர்களின் வகைகள் | | திங்களொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (ரூ. காசு.) |
|---|---|---|
| | (1) | (2) |
| (7) | விநியோகஸ்தரின் பிரிதிநிதி | 7005.00 |
| (8) | தொலைபேசி இயக்குபவர் | 7802.00 |
| (9) | எழுத்தர் | 7802.00 |
| (10) | விளம்பர அறைப் பொறுப்பாளர் | 7744.00 |
| (11) | தட்டச்சர் | 8011.00 |
| (12) | சுருக்கெழுத்துத் தட்டச்சர் | 8402.00 |
| (13) | காசாளர் | 8208.00 |
| (14) | உதவிக் கணக்காளர் | 8208.00 |
| (15) | கணக்காளர் | 9072.00 |
| (16) | உதவி மேலாளர் | 10192.00 |
| (17) | அலுவலகக் கண்காணிப்பாளர் | 9072.00 |
| (18) | மேலாளர் | 11785.00 |
| **IV.** | **விளம்பரம்** | |
| (1) | துப்புரவுப் பணியாளர் | 6810.00 |
| (2) | அலுவலகப் பையன்/ஏவலாள் | 6880.00 |
| (3) | காவலாள் | 6880.00 |
| (4) | ஓட்டுநர் (விளம்பர வேன், கனரக வாகனம்) | 7744.00 |
| (5) | ஓட்டுநர் (விளம்பர வேன், இலகு ரக வாகனங்கள்) | 7409.00 |
| (6) | தொலைபேசி இயக்குபவர் | 7802.00 |
| (7) | எழுத்தர் | 7802.00 |
| (8) | தட்டச்சர் | 8011.00 |
| (9) | சுருக்கெழுத்துத் தட்டச்சர் | 8402.00 |
| (10) | உதவிக் கணக்காளர் | 8208.00 |
| (11) | காசாளர் | 8208.00 |
| (12) | கணக்காளர் | 9072.00 |
| **V.** | **ஏனைய பிரிவுகள்** | |
| (1) | ஏனையோர் | 6810.00 |

**விளக்கங்கள்: (1) அகவிலைப்படி:** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடபபட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001=100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள் ஆகும்.) 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி நாளொன்றுக்கு ரூ. 42.25 (நாற்பத்து இரண்டு ரூபாய் இருபத்து ஐந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்படவேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(3) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(4) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மங்கத் ராம் சர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

**(தமிழாக்கம்)**

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 56, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H1)த் துறை, 14 மே 2018.]*

தமிழ்நாடு 1958–ஆம் ஆண்டு உணவக நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 13/1958) 20–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) ஆம் உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 15–07–2015 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2 இல், 480 மற்றும் 481 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் எண் II(2)/LE/390/2015 ஆம் எண் அறிவிக்கையினை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழ்க்காணும் அட்டவணையின் நெடும்பத்தி (2)–இல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களை இதன் நெடும்பத்தி (3)–இன் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளூர் எல்லைகளுக்குள் மேற்சொன்ன சட்டத்தின் நோக்கத்திற்காக ஆய்வாளர்களாக இதனால் நியமிக்கிறார்.

**அட்டவணை**

| *தொடர் எண்* (1) | *அலுவலர்கள்* (2) | *உள்ளூர் எல்லைகள்* (3) |
|---|---|---|
| (1) | தொழிலாளர் துறை ஆணையர், சென்னை | தமிழ்நாடு மாநிலம் முழுவதும் |
| (2) | தொழிலாளர் துறை இணை ஆணையர், (ஆய்வுகள்) சென்னை | தமிழ்நாடு மாநிலம் முழுவதும் |
| (3) | தொழிலாளர் துறை இணை ஆணையர் – I, சென்னை. | காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் வருவாய் மாவட்டங்களின் எல்லைக்குள் அமைந்த பகுதிகள் நீங்கலாக சென்னை மாநகராட்சி |
| (4) | தொழிலாளர் துறை இணை ஆணையர் – II, சென்னை. | காஞ்சிபுரம், திருவள்ளூர், மற்றும் கடலூர் வருவாய் மாவட்டங்கள். |
| (5) | தொழிலாளர் துறை இணை ஆணையர், வேலூர் | வேலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் வருவாய் மாவட்டங்கள். |
| (6) | தொழிலாளர் துறை இணை ஆணையர், திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை வருவாய் மாவட்டங்கள். |
| (7) | தொழிலாளர் துறை இணை ஆணையர், மதுரை | மதுரை, விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை வருவாய் மாவட்டங்கள். |
| (8) | தொழிலாளர் துறை இணை ஆணையர், திண்டுக்கல் | திண்டுக்கல், தேனி மற்றும் கரூர் வருவாய் மாவட்டங்கள். |
| (9) | தொழிலாளர் துறை இணை ஆணையர், திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி வருவாய் மாவட்டங்கள். |
| (10) | தொழிலாளர் துறை இணை ஆணையர், கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் வருவாய் மாவட்டங்கள் |

| தொடர் எண் (1) | அலுவலர்கள் (2) | உள்ளூர் எல்லைகள் (3) |
|---|---|---|
| (11) | தொழிலாளர் துறை இணை ஆணையர், சேலம். | சேலம், தருமபுரி, மற்றும் கிருஷ்ணகிரி வருவாய் மாவட்டங்கள். |
| (12) | தொழிலாளர் துறை இணை ஆணையர், குன்னூர். | நீலகிரி, நாமக்கல் மற்றும் ஈரோடு வருவாய் மாவட்டங்கள். |
| (13) | தொழிலாளர் துறை உதவி ஆணையர், (மகளிர் நலன்), சென்னை. | சென்னை, வேலூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை மற்றும் திருவள்ளூர் வருவாய் மாவட்டங்கள். |
| (14) | தொழிலாளர் துறை உதவி ஆணையர், (மகளிர் நலன்), திருநெல்வேலி. | திருநெல்வேலி, தூத்தூக்குடி, கன்னியாகுமரி மற்றும் விருதுநகர் வருவாய் மாவட்டங்கள். |
| (15) | தொழிலாளர் துறை உதவி ஆணையர், (மகளிர் நலன்), கோயம்புத்தூர். | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி வருவாய் மாவட்டங்கள். |
| (16) | தொழிலாளர் துறை உதவி ஆணையர்கள் (செயலாக்கம்) | 2009 ஆம் ஆண்டு சட்டமுறை எடையளவு சட்டத்தின் (மத்திய சட்டம் 1/2010) கீழ் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட உள்ளூர் எல்லைகள். |
| (17) | தொழிலாளர் துறை துணை ஆய்வாளர்கள். | |
| (18) | தொழிலாளர் துறை உதவி ஆய்வாளர்கள் | |
| (19) | தமிழ்நாட்டிலுள்ள சிறப்பு பொருளாதார மண்டலங்களின் மேம்பாட்டு ஆணையர்கள் | சம்பந்தப்பட்ட சிறப்பு பொருளாதார மண்டலம். |

**மங்கத் ராம் சர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

**(தமிழாக்கம்)**

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 64, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (D2)த் துறை, 30 மே 2018.]*

**1947–**ஆம் ஆண்டு தொழிலகத் தகராறுகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் XIV/1947) **4–**ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், **22–04–2015** ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் **II** பிரிவு **2–**இல், **321** முதல் **323** வரையிலான பக்கங்களில் வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/LE/193/2015 ஆம் எண் அறிவிக்கையினை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், பின்வரும் அட்டவணையின் நெடும் பத்தி **(2)–**ல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களை நெடும்பத்தி **(3)** இல் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் தொழிலகத் தகராறுகளில் நடுவராக இருந்து இணக்குவித்தல் மற்றும் தீர்வினை முன்னிலைப்படுத்தும் பணிக்குப் பொறுப்பான இணக்க அலுவலர்களாக, இதனால் நியமனம் செய்கிறார்.

## அட்டவணை

| தொடர் எண் (1) | அலுவலர்கள் (2) | பகுதி (3) |
|---|---|---|
| (1) | தொழிலாளர் நல ஆணையர், | தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் |
| (2) | தொழிலாளர் நல கூடுதல் ஆணையர், (இணக்கம்)சென்னை. | |
| (3) | தொழிலாளர் நல கூடுதல் ஆணையர், (நிருவாகம்)சென்னை. | |
| (4) | தொழிலாளர் நல சிறப்பு இணை ஆணையர், சென்னை. | |
| (5) | தொழிலாளர் நல இணை ஆணையர், (ஆய்வு) சென்னை. | |

| *தொடர் எண்* *(1)* | *அலுவலர்கள்* *(2)* | *பகுதி* *(3)* |
|---|---|---|
| (6) | தொழிலாளர் நல இணை ஆணையர் (குறைந்தளவு ஊதியங்கள்), சென்னை. | |
| (7) | தொழிலாளர் நல துணை ஆணையர், (தலைமையிடம்) சென்னை. | |
| (8) | தொழிலாளர் நல கூடுதல் ஆணையர், சென்னை. | சென்னை, வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர் மற்றும் விழுப்புரம் வருவாய் மாவட்டங்கள் |
| (9) | தொழிலாளர் நல கூடுதல் ஆணையர், திருச்சிராப்பள்ளி. | திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, திண்டுக்கல், கரூர் மற்றும் தேனி வருவாய் மாவட்டங்கள் |
| (10) | தொழிலாளர் நல கூடுதல் ஆணையர், மதுரை. | மதுரை, விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி வருவாய் மாவட்டங்கள் |
| (11) | தொழிலாளர் நல கூடுதல் ஆணையர், கோயம்புத்தூர். | சேலம், நாமக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி, தருமபுரி, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் நீலகிரி வருவாய் மாவட்டங்கள். |
| (12) | தொழிலாளர் நல இணை ஆணையர்–I, சென்னை. | காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களின் வரையறைக்குள் வரும் பகுதிகள் நீங்கலாக உள்ள சென்னை மாநகராட்சி. |
| (13) | தொழிலாளர் நல இணை ஆணையர்–II, சென்னை. | திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் வருவாய் மாவட்டங்கள். |
| (14) | தொழிலாளர் நல இணை ஆணையர், வேலூர். | வேலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் வருவாய் மாவட்டங்கள். |
| (15) | தொழிலாளர் நல இணை ஆணையர், திருச்சிராப்பள்ளி. | திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை வருவாய் மாவட்டங்கள் |
| (16) | தொழிலாளர் நல இணை ஆணையர், மதுரை. | மதுரை, விருதுநகர், இராமநாதபுரம், மற்றும் சிவகங்கை வருவாய் மாவட்டங்கள் |
| (17) | தொழிலாளர் நல இணை ஆணையர், திண்டுக்கல். | திண்டுக்கல், தேனி மற்றும் கரூர் வருவாய் மாவட்டங்கள். |
| (18) | தொழிலாளர் நல இணை ஆணையர், திருநெல்வேலி. | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி வருவாய் மாவட்டங்கள். |
| (19) | தொழிலாளர் நல இணை ஆணையர், கோயம்புத்தூர். | கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் வருவாய் மாவட்டங்கள். |
| (20) | தொழிலாளர் நல இணை ஆணையர், சேலம். | சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி வருவாய் மாவட்டங்கள். |
| (21) | தொழிலாளர் நல இணை ஆணையர், குன்னூர். | நீலகிரி, நாமக்கல் மற்றும் ஈரோடு வருவாய் மாவட்டங்கள். |
| (22) | தொழிலாளர் நல துணை ஆணையர், தொழிலாளர் நல இணை ஆணையர்–I அலுவலகம், சென்னை. | காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களின் வரையறைக்குள் வரும் பகுதிகள் நீங்கலாக உள்ள சென்னை மாநகராட்சி. |
| (23) | தொழிலாளர் நல துணை ஆணையர், தொழிலாளர் நல இணை ஆணையர்–II அலுவலகம், சென்னை. | திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் வருவாய் மாவட்டங்கள் |
| (24) | தொழிலாளர் நல துணை ஆணையர், தொழிலாளர் நல இணை ஆணையர் அலுவலகம், வேலூர். | வேலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் வருவாய் மாவட்டங்கள் |
| (25) | தொழிலாளர் நல துணை ஆணையர், தொழிலாளர் நல இணை ஆணையர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி. | திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை வருவாய் மாவட்டங்கள் |

| *தொடர் எண்* *(1)* | *அலுவலர்கள்* *(2)* | *பகுதி* *(3)* |
|---|---|---|
| (26) | தொழிலாளர் நல துணை ஆணையர், தொழிலாளர் நல இணை ஆணையர் அலுவலகம், திண்டுக்கல். | திண்டுக்கல், தேனி மற்றும் கரூர் வருவாய் மாவட்டங்கள். |
| (27) | தொழிலாளர் நல துணை ஆணையர், தொழிலாளர் நல இணை ஆணையர் அலுவலகம், மதுரை. | மதுரை, விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை வருவாய் மாவட்டங்கள். |
| (28) | தொழிலாளர் நல துணை ஆணையர், தொழிலாளர் நல இணை ஆணையர் அலுவலகம், திருநெல்வேலி. | திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி வருவாய் மாவட்டங்கள். |
| (29) | தொழிலாளர் நல துணை ஆணையர், தொழிலாளர் நல இணை ஆணையர் அலுவலகம், கோயம்புத்தூர். | கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் நீலகிரி வருவாய் மாவட்டங்கள். |
| (30) | தொழிலாளர் நல துணை ஆணையர், தொழிலாளர் நல இணை ஆணையர் அலுவலகம், சேலம். | சேலம், நாமக்கல், ஈரோடு, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி வருவாய் மாவட்டங்கள். |
| (31) | தொழிலாளர் நல துணை ஆணையர் (இணக்கம்-I), திருப்பெரும்புதூர். | காஞ்சிபுரம் வருவாய் மாவட்டம். |
| (32) | தொழிலாளர் நல துணை ஆணையர் (இணக்கம்-II), சென்னை. | திருவள்ளூர் வருவாய் மாவட்டம். |
| (33) | தொழிலாளர் நல துணை ஆணையர் (இணக்கம்), வேலூர். | வேலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் வருவாய் மாவட்டங்கள். |
| (34) | தொழிலாளர் நல துணை ஆணையர் (இணக்கம்), திருச்சிராப்பள்ளி. | திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர், மற்றும் புதுக்கோட்டை வருவாய் மாவட்டங்கள். |
| (35) | தொழிலாளர் நல துணை ஆணையர் (இணக்கம்-I), கோயம்புத்தூர். | கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைகள், கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைகளுக்கு உட்படாத கோயம்புத்தூர் தெற்கு வட்டத்தின் உள்வட்டங்கள், பொள்ளாச்சி மற்றும் வால்பாறை வட்டங்கள். |
| (36) | தொழிலாளர் நல துணை ஆணையர் (இணக்கம்-II), கோயம்புத்தூர். | கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைகளுக்கு உட்பட்ட உள்வட்டங்கள் நீங்கலாக கோயம்புத்தூர் வடக்கு வட்டம், மேட்டுப்பாளையம் மற்றும் சூலூர் வட்டங்கள் |
| (37) | தொழிலாளர் நல துணை ஆணையர் (இணக்கம்-III), கோயம்புத்தூர். | கோயம்புத்தூர் வருவாய் மாவட்டம். |
| (38) | தொழிலாளர் நல துணை ஆணையர் (இணக்கம்), நாகர்கோவில். | கன்னியாகுமரி வருவாய் மாவட்டம். |
| (39) | தொழிலாளர் நல உதவி ஆணையர்-I, சென்னை. | சென்னை மாநகராட்சியின் கோட்டங்கள் 3 முதல் 49 வரையிலானவை, 99, 100 மற்றும் 102. |
| (40) | தொழிலாளர் நல உதவி ஆணையர்-II, சென்னை. | சென்னை மாநகராட்சியின் கோட்டங்கள் 1, 2, 50 முதல் 84 வரையிலானவை, 88, 91 முதல் 95 வரையிலானவை, 97, 98, 101, 103 முதல் 106 வரையிலானவை, 109, 110 மற்றும் 111. |
| (41) | தொழிலாளர் நல உதவி ஆணையர்-III, சென்னை. | சென்னை மாநகராட்சியின் கோட்டங்கள் 85 முதல் 87 வரையிலானவை 89, 90, 96, 107, 108, 112 முதல் 155 வரையிலானவை. |
| (42) | தொழிலாளர் நல உதவி ஆணையர்-I, வேலூர். | வேலூர் மாவட்டத்திலுள்ள அரக்கோணம், வாலாஜா, இராணிப்பேட்டை, ஆற்காடு, காட்பாடி மற்றும் வேலூர் வட்டம். |
| (43) | தொழிலாளர் நல உதவி ஆணையர்-II, வேலூர். | வேலூர் மாவட்டத்திலுள்ள குடியாத்தம், ஆம்பூர், வாணியம்பாடி மற்றும் திருப்பத்தூர் வட்டங்கள் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம். |
| (44) | தொழிலாளர் நல உதவி ஆணையர், கடலூர். | கடலூர் வருவாய் மாவட்டம் |

| *தொடர் எண்* *(1)* | *அலுவலர்கள்* *(2)* | *பகுதி* *(3)* |
|---|---|---|
| (45) | தொழிலாளர் நல உதவி ஆணையர், தஞ்சாவூர். | தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள். |
| (46) | தொழிலாளர் நல உதவி ஆணையர், மதுரை. | மதுரை வருவாய் மாவட்டம். |
| (47) | தொழிலாளர் நல உதவி ஆணையர், விருதுநகர். | விருதுநகர் வருவாய் மாவட்டம். |
| (48) | தொழிலாளர் நல உதவி ஆணையர், இராமநாதபுரம். | இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை வருவாய் மாவட்டங்கள். |
| (49) | தொழிலாளர் நல உதவி ஆணையர், திருநெல்வேலி. | திருநெல்வேலி வருவாய் மாவட்டம். |
| (50) | தொழிலாளர் நல உதவி ஆணையர், தூத்துக்குடி. | தூத்துக்குடி வருவாய் மாவட்டம். |
| (51) | தொழிலாளர் நல உதவி ஆணையர், சேலம். | சேலம் மற்றும் நாமக்கல் வருவாய் மாவட்டங்கள். |
| (52) | தொழிலாளர் நல உதவி ஆணையர், கிருஷ்ணகிரி. | கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி வருவாய் மாவட்டங்கள். |
| (53) | தொழிலாளர் நல உதவி ஆணையர், ஈரோடு. | ஈரோடு வருவாய் மாவட்டம். |
| (54) | தொழிலாளர் நல உதவி ஆணையர், கோயம்புத்தூர். | கோயம்புத்தூர் வருவாய் மாவட்டம். |
| (55) | தொழிலாளர் நல உதவி ஆணையர், திருப்பூர். | திருப்பூர் வருவாய் மாவட்டம். |
| (56) | தொழிலாளர் நல உதவி ஆணையர், தொழிலாளர் நல இணை ஆணையர் அலுவலகம், குன்னூர். | நீலகிரி வருவாய் மாவட்டம். |
| (57) | தமிழ்நாட்டிலுள்ள சிறப்பு பொருளாதார மண்டலங்களின் மேம்பாட்டு ஆணையர்கள் / இணை மேம்பாட்டு ஆணையர்கள். | மேம்பாட்டு ஆணையராக நியமிக்கப்பட்டிருக்கின்ற அந்தந்த சிறப்பு பொருளாதார மண்டலங்கள். |

**மங்கத் ராம் சர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.